1970 ஏப்ரல் 6]

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள காவிரிப் பாசன ஆயக்கட்டுகள்

***699 வினா.—திரு என். கிட்டப்பா:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், காவேரிப் பாசனத்தின் கடைமடைப் பகுதி, மண்ணியாற்றின் தலைப்பு மண் அடித்து தூர்ந்து போய் விட்டதால் அதற்கு கொள்ளிடம், குமுக்கி மண்ணியாற்றிலிருந்து தற்காலிகமாக தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதை நிரந்தரமாக்கக் கோரி விவசாயிகளிடமிருந்து கோரிக்கை ஏதேனும் அண்மையில் வந்ததா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு எடுத்துள்ள முடிவென்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: (அ) ஆம். 1966-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் முறையீடு ஒன்று வரப்பெற்றது.

(இ) மண்ணியாற்றின் தலைப்பகுதியை மேம்பாடுசெய்து அதன் ஆயக்கட்டிற்குத் தண்ணீர் போதிய அளவு கிடைக்க வகை செய்வதற்கான செயற்குறிப்புகள் உள்ளன. மண்ணியாற்றின் தலைப்பகுதியை மேம் பாடு செய்து அதனால் ஏற்படக்கூடிய பலன்களைச் சிலகாலம் கவனித்த பின்னரே, மண்ணியாற்றுக்கு நீர் வழங்கும் வாயிலை மாற்றுவது குறித்து அதாவது குமுக்கி மண்ணியாறு கலக்குமிடத்திற்குக் கீழே மண்ணியாற்றின் கீழ் கடைமடைப்பகுதியில் உள்ள 3,738 ஏக்கர் ஆயக்கட்டுக்கு தற்போது தற்காலிக ஏற்பாடாக குமுக்கி மண்ணியாற்றி லிருந்து நீர் வழங்கப்பட்டு வருவதை நிலையான ஏற்பாடாக்குவது குறித்து ஆலோசிக்கப்படும்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, மண்ணியாற்றின் தலைப்பு பெரும்பாலும் தூர்ந்துவிட்ட காரணத்தினால், மண்ணியாற்றில் கடை மடைப் பகுதிக்குத் தேவையான தண்ணீர் கிடைப்பது மிகவும் அரிதாக இருக்கிறது. எனவே, குமுக்கி மண்ணியாறு மூலம் கொள்ளிடத்தில் மண்ணியாற்றின் கடைமடைப்பகுதிக்குத் தண்ணீர் விட ஒரு நிரந்தரமான உத்தரவை அரசு பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: ஏற்கெனவே நான் அளித்த பதிலில் இந்த விவரங்கள் அடங்கியிருக்கின்றன.

திருமயம் தொகுதியிலுள்ள விராச்சிலைக் கண்மாய்க்குக் கால்வாய் அமைப்பு

***700 வினா—புலவர் பொ. பொன்னம்பலம்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

திருமயம் தொகுதியிலுள்ள வாழக்குறிச்சி நெய்வேலிக் கண்மாய் களின் கலிங்கல் நீர் வந்து விழும் கூடலூர் ஆற்றிலிருந்து தேவங்குழி, கண்ணேரிக் கண்மாய், ஆலங்குடிக் கண்மாய் வழியாக விராச்சிலைக் கண்மாய்க்குக் கால்வாய் வெட்டிப் பாசனத்தைப் பெருக்குவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா : இல்லை.

புலவர் பொ. பொன்னம்பலம்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டைப் பகுதியில் உள்ள கண்மாய்கள், கலிங்கல் அமைப்பு சங்கிலித் தொடர் போன்று அமைந்திருப்பதன் காரணமாக, அந்தப் பகுதியில் கூடலாறு என்று அழைக்கப்படும் நெரிஞ்சிக்குடி ஆற்றையும், பாம்பாற்றையும் இணைக்கக்கூடிய கால்வாய் ஒன்று அமைக்கப்பட்டால் நிறைய கண்மாய் ஆயக்கட்டுகள் பயன் பெறும். ஆகவே, அரசாங்கத்தின் சார்பில் இது பரிசீலனை செய்யப்பட்டு மேற் கொள்ளப்படுமா என்று அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : நெய்வேலிக் கண்மாயிலிருந்து கூடுதலான நீரை மற்ற கண்மாய்களுக்குக் கொடுக்கும் யோசனை இல்லை. ஆனால், நெரிஞ்சிக்குடி ஆற்றின் குறுக்கே அணை கட்டி, நாகணியேந்தல் கண்மாய், வடக்குப்பொட்டைக் கண்மாய், தெற்குப் பொட்டை கண்மாய், பன்யம் கண்மாய், குலத்தாண்டன் கண்மாய் ஆகிய ஐந்து கண்மாய்களுக்கும் நீர்வழங்கும் யோசனை பரிசீலிக்கப்பட்டு வருகிறது—

திருமயத்திலுள்ள தாமரைக் கண்மாயைத் தூர் எடுத்தல்

*** 701 வினு—புலவர் பொ. பொன்னம்பலம்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருமயம் தாமரைக் கண்மாயை இயந்திரங்களைக் கொண்டு மண் மராமத்து செய்து சீர்படுத்தும் பெரும் வேலைத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும்.?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) இல்லை.

(இ) இவ்வினு எழவில்லை.

புலவர் பொ. பொன்னம்பலம் : திருச்சிராப்பள்ளி மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருகிற நேரத்தில், ஒரு திட்டம் பரிசீலனையில் இருப்பதாகவும், அரசுக்குப் பரிந்துரை செய்திருப்பதாகவும் அங்கே சொன்னார்கள். அந்தத் திட்டம் இங்கே பரிசீலனைக்கு அனுப்பப்பட்டு, பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: அந்தத் திட்டம் மாவட்ட ஆட்சித் தலைவரின் சிபார்சின் பேரில் தலைமைப் பொறியாளரால் கைவிடப்பட்டிருக்கிறது.

Pambaiyar Scheme

9-30 முற்பகல் *** 702 *Q.*—THIRU T. MARTIN :** Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the 'Pambaiyar' Scheme is now pending before the Government of Tamil Nadu for execution ; and

(*b*) if so, the particulars thereof ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவர் அவர்களே, ராமநாதபுரம் மாவட்டம் ஒரு வறண்ட மாவட்டமாகும் ; திருநெல்வேலி மாவட்டம் வறண்ட பகுதிகளைக் கொண்ட மாவட்டம். ஆகவே, இந்த பம்பையாறு செயல் முறைக்குவந்தால் அந்த மாவட்டங்கள், பயன் அடையும், பழைய காங்கிரஸ் ஆட்சி காலத்திலேயே கேரள அரசோடு தொடர்பு கொண்டு அதைச் செயல்படுத்த செயற்குறிப்பு இருப்பதாகச் சொல்லப் படுகிறதே அது உண்மையா ? அப்படியானால், அதைத் தொடர்ந்து இந்த அரசாங்கம் கேரள அரசோடு தொடர்புகொண்டு, இந்த பம்பையாறு திட்டத்தைச் செயல்படுத்த முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.